**23.06.2025**

**அ.வ.எண். 137/2017**

**பி.சா.1 - ராஜேஸ்வரி, க/பெ. ரமேஷ்**

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 23.06.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்தை என்னுடைய தாய்வழிபாட்டி 1961 ல் (பி.சா.ஆ.7) வாங்கினார். பாட்டிக்கு கிரயம் கொடுத்தவரின் பெயர் நினைவில்லை. அருகில் இருந்தவரிடம் கிரயம் பெற்றார். க.ச.எண்.44/1 ல் மொத்த உள்ள ஏக்கர் 8.80 ல் எங்களது பாட்டிக்கு கிரயம் கொடுத்தது போக மீதமுள்ள சொத்துக்கள் அனைத்தையும் கணபதி கவுண்டரின் வாரிசுகள் மற்றவர்களுக்கு கிரயம் கொடுத்துவிட்டனர் என்றால் சரிதான். கணபதி கவுண்டரின் மனைவியும், மற்றும் அவரது மைனர் மகன் பொன்னுசாமியும் தான் சொத்தை கிரயம் கொடுத்தனர் என்றால் சரிதான்.

2. கணபதி கவுண்டருக்கு, பொன்னுசாமி கவுண்டர் போக 5 பெண் மக்கள் என்றால் சரிதான். இந்த பெண் மக்களை கிரய பத்திரத்தில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1962 ஆண்டு முதல் வழக்கு தாக்கல் செய்யும்வரை வழக்கு சொத்து காலியிடமாக தான் உள்ளது. கட்டிடம் எதுவும் இல்லை. கட்டிடம் கட்ட ஆரம்பித்தபோது வாதி அவருக்குரிய பங்கை பிரித்து கொடுக்குமாறு கேட்டார் என்றால் எனக்கு தெரியாது. நான் திருமணமாகி தாவா சொத்திற்கு சற்று தள்ளி ½ கி.மீ தொலைவில் உள்ளேன்.

3. 13 ம் பிரதிவாதி அரசூரிலும், 14 ம் பிரதிவாதி தாவா சொத்திலும் உள்ளார்கள். தாவா சொத்து சுமார் 2 ஏக்கர் நிலம் அதில் 10 சென்ட்டிற்கும் குறைவாக கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் 5 சென்ட் கட்டிடம் இருக்கும். மீதமுள்ள பூமியில் மழை பெய்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும். மற்ற சமயத்தில் காலியிடமாகவே இருக்கும். கிரயப்பத்திரத்தில் எனக்கும் என் வாரிசுகளுக்கும் என கண்டு என எழுதியிருப்பதால் நான் மற்ற வாரிசு தாரர்களுக்கு என்ன பங்கு விகிதாச்சாரம் உள்ளது என்பதை பற்றி தெரிந்து கொள்ளவில்லை.

4. வாதிக்கு, தாவா சொத்தில் 9/49 பங்கு உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. அவர்களின் பாட்டி கிரயம் கொடுத்து விட்டார். பி.சா.ஆ.7 கிரய பத்திரத்தில் பெண் மக்களுக்காக கிரயம் கொடுக்கிறேன் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் வள்ளியம்மாள் என்கின்ற சின்னம்மாள் தனக்காகவும், தனது மைனர் மகன் பொன்னுசாமிக்காகவும் தான் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 கிரய பத்திரத்தில் முழு சொத்துக்களையும் கிரயம் எழுதியுள்ளதால் வாதிக்கு பாத்தியப்பட்ட 9 பாகத்தை பொறுத்து இந்த கிரய பத்திரம் எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur